உ

திருவொற்றியூர்

# வடிவுடையம்மன்

## ஆசிரியவிருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

உ

## திருவொற்றியூர்

# வடிவுடையம்மன்

## ஆசிரிய விருத்தம்.

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய்நின்ற வுமையே, சுக்கிரவாரப்பெருமை கண்டுனது சேவையுஞ் சொல்லவும் எளிதாகுமோ, சந்தநிதி யாகியே செந்தமிழ்ப்புராணிஎன் சலிப்பெலாமாற்றியருள்வாய், சற்குணி மெற்குணி நிற்குணி சதுர்வேதசமயமும்மாரிநீயே, சிந்தைமிக நொந்துயான் வந்தகுறை யுந்தன்முன் செப்பவுங்கேட்கவில்லையோ, சேய்பெற்ற தில்லையோ நீதியுணர்வில்லையோ ஜெகமெலாம் பெற்றதாயே, தந்திரமுகுந்தனிட தங்கைசிவமங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளி வானவடிவே. (௧)

மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வம்நீ மற்றுமொரு தெய்வமுண்டோ, மந்திரப்பேய்களுந் தந்திரச் சூன்யமும் மற்றுசத்ராதிபகையும், கண்டுனதுபாதமலர் நின்றுதுதிசெய்திடக் கலங்கிப்பறந்தோடுமே, கன்மமும்

பிணிகளும் வன்மமில்லாமலே கண்டவுடன் தெண்டனிடுமே, இன்றுமுதலாய் வந்த பண்டுபழிபாவமும் இனிமேல் வரும் வினைகளும், எந்தன்மேல் கணக்காக சிந்தையினினைக்காமலியமனனுகாமலருள்வாய், தண்டுளபமாலையணி மார்பனது தங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. (உ)

பாரெலாந் துதிபெற்ற பாதவிரன் மோதிரம் பாடகந் தண்டை கொலுசும், பணிந்தவிடைமீதினி லணிந்த பட்டாடையும் பசும்பொன்னிரெட்டியாணமும், வாரணியுமார்பினிற் சரப்பளிபதக்கமும் வச்சிரமணிதாலியழகும் வையகந்துதிபெற்றகையினிற்கடகமும் வண்ணநிறமானகிளியுஞ், சீரொழுகுகாதினிற் கம்மலுந் தொடுகொப்பும் ஜெகமெலாம நிறைந்தவுருவுஞ், சித்ரவொளிபார்வையும்ரத்னமூக்குத்தியுஞ் செண்பகமுடித்தகுழையுந், தாரணியி லுன்பெருமை சாற்றவெளி தாகுமோ தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. (ரு)

தாயதுவயற்றிலேமாயமாய்த்தரித்துநான்றங்கினேனங்குசிலநாள், தரணியில் விழுந்துபின் புழுதியில் புர

ண்டுகொன் தவிழ்ந்தடிநடந்துசிலநாள், காயமும்வளர்ந்தி ந்த பாரினி லுழன்றுமிக் காளையாய்த் திரிந்து சிலநாள், காமனல் வதங்கியே பூமைபோல்மயங்கிக் கருத்ததுவழி ந்துசிலநாள், மாயையாலேலோக வாழ்க்கைதனை மெய் யென்று மயங்குதென் மனதிலம்மா, மாருத பிறவிதுய ராராலெடுக்சுதர மைந்தன் சுமக்க வசமோ, தாயென்று உன்னைநா நம்பினேனருள்புரிவை தரணிபுகழொற்றியூர் வாழ், தங்கமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்க ளொளிவானவடிவே. (௪)

நற்செய விலாதவுட லச்சைபாடானசுக நற்குண மிலாதகுறைகள், நான்முகனெனும் பாதகன்செய்தகப டமோ நன்னலப் பெயர்செய் தவமோ, சற்சனர்களி ல்லாத சபையினைப் போலவே தயங்கிமிகவே யினைத் தேன், தாயேயுன்னுதரவு பேழையான் செய்த பிழை தாபலா லார்பொறுப்பார், அர்ச்சனைகள் செய்துதொழு மிச்சை படியாரினு மந்தரத்தொடு புறப்பாய், அன்னை யுனை யல்லாது பின்னைவே றில்லையே யநாதரட்சகியல் லவோ, தற்சொரூபமாயிலகுமச்சுதன்தங்கையே தரணி புகழொற்றியூர்வாழ், தங்கமல நாதர்சடை கங்கையுரு வானகொடி திங்களொளிவானவடிவே. (௫)

நில்லாதசமுசார மாய்கையெனை வந்துதான் நித்த மும் வாதிக்குதே, நெஞ்சமது பஞ்சைபோ லஞ்சியே சஞ்சலம் நினைவிலே பெரிதாகுதே, நல்லோரை யெண் ணுமல் பொல்லாச் சினத்தினல் நடுங்கிடப்பேசவருதே, நாவிலுன்புகழையே பாவிதொழவொட்டாமல் நன்னி வை மாற்றிவிடுதே, கல்லாதபுல்லரிடம் வல்லாண்மை பேசியே காலனுக்குள்ளாகுதே, கள்ளமனதானவிதை நல்லமனதாகிடக் கருணைகடாட்சம் வைத்துத், தள்ளி யென்வறுமைபிணி நல்ல செல்வங்களருள் தரணிபுக ழொற்றியூர்வாழ், தங்கமலநாதர்சடைகங்கையுருவான கொடி திங்களொளிவானவடிவே (௬)

பெற்றதாய் தந்தையும் பிறவியு மிருந்தென்ன பி ள்ளைபெண்சாதிபென்றும், பிரியமாய் மனிதர்க்கு உற வாயிருந்தென்ன பிராணனுக்குதவியுண்டோ, நித்தனு ரிடமாக முத்திதர வேயொளிரு நீலியம்பிகை திரிசூலி, நீங்கவொட்டாமலே தேங்குமுளமலநீக்கி நிலையான பத வியருள்வாய், மெத்தவே நொந்துனது சிற்றடியை நம் பினேன் மிகமவுனமாயிராதே, மேதினியி லுன்னைவிட வேறுமொரு தெய்வங்கள் மெய்யான தெய்வமுண்டோ தத்திமித்தாளமொடு வருமமலர்தியாகர்மகிழ் தாணிபு

கழொற்றியூர் தங்கமல நாதர்சடை கங்கையுருவான கொடி திங்களொளிவானவடிவே. (எ)

ஓயாத கவலையுந் தீராதவறுமையு மொழியாதவன் பிணிகளும், உலகெலாம்பகைகளு மளவிலாக்கன்மமு மொருவராற் சொல்லவசமோ, பேயாகநானிந்த பீடை யிற்சிக்கியே பிதற்றவும் பூமிதனிலே, பெண்களெனுமா யையாலங்கமதுவாடியே பிரமையால்மெய்தளர்ந்தேன், தாயென்று வலறியழ ஏனென்று கேட்கிலாய் தருமமோ வுந்தனுக்கு, தஞ்சமென்றுன்பாத நெஞ்சினில் நினைத் தோர்கள் தளர்வரோ தரணிதனிலே, தாயேயிதுதர்ம மோ மாயனது தங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொ ளிவானவடிவே. (அ)

எத்தனை துயரென் றியம்புவே னம்மம்ம வெளி யேன்செய் கொடுமையேதோ, இக்காய மிச்செல்வம் நிலை யென்று நம்பியே யிப்படியெலாந் தளர்ந்தேன், பெற்றதாய்நீயென்று முறையிட்டு வலறிடப்பேசாதிரு ப்பதேனோ, பேச்சொன் றெனக்குதவில் தாட்சியோ அம்மணி பிள்ளைமேற் கோபமேதோ, அத்திமுகனைப் பெற்ற நித்தியகல்யாணியே யமரர்தொழும் சர்வாணி

யே, அறியாத சிறுவன்மே லினியாகிலுளமகிழ்ந் தன்பு வைத் தருள்புரிகுவாய், தத்துமயில்வாகனனை பெற்ற கௌமாரியே தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கைமலநாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. (சு)

படிக்கவறியே னுனைத்துதிக்கவறியே னென்ன பாதகத்தின் கொடுமையோ, பாட்டுமறியேன் கவிதைகேட்டுமறியேன் மிக்க பாவலர்கள் நேசமறியேன், நடுங்கிடக்குருவடி வணங்கியறியேன் சடிலநாதனடி பூசையறியேன், நான்மனிதனுருவாகி பூமியிற்சன்மித்து நலமான செல்வமறியேன், கடல்சூழுமிவ்வுலகி லென்போலு மூடனைக் கண்டதுண்டோவருளுவாய், காமாட்சியுந்தனிடபாதமேநம்பினேன் கன்மவினைய ணுகாமலே, தடுத்தடிமைகொண்டெனைக்கடத்தேறவேயருள்தரணிபுகழொற்றியூர்வாழ், தங்கமல நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. (எ)

மண்ணினி லிருக்களவு மின்றுமுதலாகவும் மனுவொன்று கேட்பதடியேன், மாறாதசெல்வமுந் தோறாதகல்வியு மனுநீதி ஞானவழியுங், கண்ணிலிருள்நாடாமல் காயமிகவாடாமல் கைகால்கள் சோகாமலே, காலனு

க்கஞ்சாமல் கலியேனுமிஞ்சாமல் காத்துசினம்வாராம
லே, பண்ணவேதருமமு மினியவுபகாரமும் பசித்தபே
ர்க் கமுதுதரவும், பாருலகிலுன்றனது பாதத்தை நம்பி
னேன் பட்சமாய்ரட்சியம்மா, மண்ணிதழி மாலையணி
தற்பரற்கமுதமே தரணிபுக ழொற்றியூர்வாழ், தங்கம
லநாதசடை கங்கையுருவானகொடி திங்களொளிவான
வடிவே. (கக)

## வடிவுடையம்மன் ஆசிரிய விருத்தம்

முற்றிற்று.